RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s223

OPEN ACCESS

# ஜெயமோகனின் அறம் சிறுகதைத் தொகுப்பில் கதைத் தொடக்கம்

**ச. சரண்யா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, ஆத்தூர்-636121, தமிழ்நாடு, இந்தியா.

# Story Begins in Jayamohan’s Virtue Short Story Collection

**S. Saranya** [a, *]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts College, Attur–636121, Tamil Nadu, India

* Corresponding Author: saranyashandran11@gmail.com

Received: 01-04-2021
Revised: 11-02-2022
Accepted: 15-02-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

Story telling and listening to stories is happening in the tamil community. It was given the form of a short story. The beginning of a good short story is artistic and charismatic enough inspire readers to read. The short series that deals with the introduction of the story mantra in the form of dialogue in the form of narrative statement stage start conscious awareness brings the character to the forefront and enlivens the stories so the beginning of the short stories Jayamohan’s short stories are set in the middle of the story in away that provokes problems and curiosity.

**Keywords:** Jayamohan, Virtue, Narrative, Short Story

## முன்னுரை

ஆதிகாலத்தில் கட்டுக்கதைகள் என்ற வகையில்தான் கதைகள் மதிக்கப்பட்டன. கதைகளில் காணப்படும் நிகழ்ச்சிகள் உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் என்பதற்கு மாறாக, கதை சொல்பவரின் கற்பனைத் திறனுக்கேற்பச் சொல்லப்படுகின்றன. இன்று நாவல், சிறுகதை, கவிதை என அனைத்திலும் கதையைக் காண்கிறோம். கதை என்பது ஒருவர் சொல்லி மற்றவர் கேட்பது போன்ற அளவில் கதைக்கப்டுவது கதை ஆகும்.

ஒரு கதையில் படைப்பின் தலைப்பு அதன் திறவுகோல் என்றால் அந்தப் படைப்பின் தொடக்கம் அதன் நுழைவாயில் எனலாம். ஒரு கட்டிடத்திற்குள் நுழையும் மனிதன் அக்கட்டிடத்தின் வரவேற்பறையில் வரவேற்கப்படும் விதம் அவனுக்கும் அந்த கட்டிடத்திற்கும் தொடர்பைத் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு படைப்பை அணுகும் வாசகனுக்கும் அப்படைப்பிற்குமான உணர்வும் இத்தகையதுதான் ஒரு கதையை வாசகனுக்கு முழுமையாகக் கொண்டு சேர்ப்பதில் அதன் தொடக்கத்திற்கும் பெரும் பங்கு உண்டு. கதையின் தொடக்கம் மொழி நடையாளும் இட வருணனையாலும் வெளிப்பாட்டு உத்தியாலும் சீரிய சொல்லாடல்களாலும் வாசகர்களை ஈர்க்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அவர்கள் அறம் சிறுகதைத் தொகுப்பை எவ்வாறு அமைந்திருக்கின்றார் என்பதைக் காணலாம் (Jayamohan, 2011).

## எதிர்பார்ப்பை வளர்த்தல்

ஒரு கதையின் தொடக்கம் அதைப் படிக்கும் சுவைஞனுக்கு அக்கதையை ஒட்டி எதிர்பார்ப்புகளை உருவாக்க வேண்டும். அந்த எதிர்பார்ப்பு சுவைப்பு எல்லையில் மட்டும் நிற்காமல்

சூழல் சார்ந்த (அல்லது) அறிவியல் விஞ்ஞானம் சார்ந்த (அ) ஏதேனும் ஒரு துறையைச் சார்ந்த அறிதல் ஆர்வத்தையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இங்கு பல்துறை சார்ந்த அனுபவம் அறிதல் ஆர்வத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

“என் பெயர் வணங்கான். ஆமாம் பெயரே அதுதான். முழுப்பெயர் என்றால் கெ. வணங்கான் நாடார் இல்லை. இது என் குலச்சாமியின் பெயரெல்லாம் இல்லை. இந்தப் பெயர் என் குடும்பத்தில் எனக்கு முன் எவருக்கும் போய் பட்டதில்லை. என் சாதியில் சுற்று வட்டத்தில் எங்கும் இப்படி ஒரு பெயர் கிடையாது. இந்தப் பெயருள்ள இன்னொருவரை நான் சந்தித்ததே இல்லை. ஏன் இந்தப் பெயரைக் கேள்விப்பட்ட ஒருவரைக்கூட நான் பார்த்ததில்லை” (Jayamohan, 2011).

என்ற தொடக்கம் கதையின் மீது சுவைஞனின் எதிர்பார்ப்பைத் தூண்டுவதாக உள்ளது. கதையைத் தொடர்ந்து துன்பக் காட்சிகள் நிறைந்து இருந்தாலும் இறுதியில் விடை கிடைக்கப்போகும் பாத்திரம் எப்படி வணங்கான் ஆனது என்பதை சுவைஞர்களிடம் வளர்ப்பது கதையின் தொடக்கமாகும்.

இதேபோன்று, கதையின் தலைப்பு ‘மறுபடியும்’ என்ற தலைப்பானது தொடக்கத்திலும் கதை முடிவிலும் வருகிறது (Poornachandran, 2012).

## பாத்திர வருகை

ஒரு கதையில் இடம் பெறும் தலைமைப் பாத்திரத்தின் (அ) துணைமைப் பாத்திரத்தின் வருகையை வருணிப்பது கதையின் தொடக்கப் பண்புகளில் ஒன்று கதையின் தொடக்கத்தில் சுட்டப்படும் பாத்திரம் கதைக்கு இன்றியமையாது இருத்தல் நன்று. அவ்வாறு சுட்டப்படும் பாத்திரம் கதைக்கு இன்றியமையாததாகத் திகழ வேண்டும். எனினும் அது துணைமைப் பாத்திரமாக இருந்தாலும் தலைமைப் பாத்திரமாக அமைய வேண்டும். ஜெயமோகனின் அறம் சிறுகதையில் அத்தகைய முக்கியத்துவம் பெற்ற பாத்திரம் (Jayamohan, 2011). அக்கதையின் தொடக்கம் ஒரு வீட்டுக்குள் நுழையும் ஜெயமோகனின் வருகையை வர்ணிக்கின்றது.

இதற்கு, “வாசகர்களுக்கு முக்கியக் கதாபாத்திரம் கவர்ச்சிகரமாகவும், முழுமை பெற்ற ஆளாகவும் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அடிப்படையில் மேன்மை உடையவனாகவும், நாகரீகமானவனாகவும், நல்லெண்ணம் உடையவனாகவும் இருத்தல் வேண்டும்” (Poornachandran, 2012).

இவ்வாறாக கதையில் நிலைநாட்டப்படும் “அறம்” ஜெயமோகனின் வருகையை ஒட்டி அவருக்கு விவரிக்கப்படும் கதையாக உள்ளதால் இத்தொடக்கத்தைக் கதைக்கு மெருகூட்டும் இயல்பினதாகக் கருதலாம்.

## கதை நிகழ்ச்சியை வளர்ப்பதற்கான அடித்தளம்

ஒரு சிறுகதையை கட்டிடமாக உருவகம் செய்து கொண்டால் அக்கதையின் தொடக்கத்தை அக்கட்டிடத்தின் அத்திவாரம் எனலாம். ஒரு கட்டிடத்தை சீரான முறையில் கட்டுவதற்கு அடிப்படையானத் தர அளவீடு அதனுடைய அத்திவாரம்தான்.

ஒரு கதையின் தொடக்கத்திற்கும், அத்திவாரத்திற்குரிய பண்பு இருக்க வேண்டும். அத்தொடக்கம் கதை நிகழ்ச்சிகளை ஒன்றையடுத்து ஒன்றாக இயல்பு கெடாமல் இணைத்து கதையை வளர்த்து செல்வதற்கான அடித்தளத்தைக் கதையின் தொடக்கம் அமைத்தல் வேண்டும்.

சோற்றுக்கணக்கு சிறுகதையானது திருவனந்தபுரத்திலுள்ள ஒரு உணவு விடுதியைப் பற்றியது (Jayamohan, 2011). அந்த உணவு விடுதிக் குறித்த பிரமிப்புக்களைப் படிப்படியாக வாசகர் மனதில் ஏற்றுவதுதான் கதையின் போக்கு. இதற்கு ஏற்ற வகையில் இக்கதையின் தொடக்கம் உள்ளது.

“கெத்தேல் சாகிப் என்றால் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். திருவனந்தபுரம் சாலை பஜாரில் இப்போது ஸ்ரீ பத்மநாபா தியேட்டர் இருக்கும் இடத்திற்கு அருகில் அந்தக் காலத்தில் அவரது

சாப்பாட்டுக் கடை இருந்தது. அறுபது, எழுபதுகளில் அங்கே சாப்பிடாதவர்கள் திருவனந்தபுரத்தில் இருந்தால் அவர்கள் சைவச் சாப்பாட்டுக்காரர்களாக இருப்பார்கள் (Jayamohan, 2011).

இவ்வாறு இக்கதையின் தொடக்கத்தைப் படிக்கும் சுவைஞனின் மனதில் அப்படி அந்த உணவு விடுதியில் என்னதான் சிறப்பு உள்ளது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. தொடர்ந்து வரும் கதையின் காட்சிகள் சுவைஞரின் கேள்விக்கு பதிலாக பல சுவையானத் தகவல்களை அடுக்குகிறது சுவைஞர் இறுதிவரை சுவை குன்றாமல் படித்து முடிப்பதற்ற ஏற்ற வழிவகை செய்கின்றது.

இதற்கு, "படைப்பாளி வெளிப்படுத்த விரும்புகின்ற மாந்தரின் தோற்றத்தையோ, இடத்தையோ, செயலையோ வாசகனின் மனத்திரையில் காட்சியாக விழும்படி வருணிக்கும் நடையேக் காட்சி நடையாகும். ஆசிரியர் இப்படித்தான் பார்த்திருப்பார் என வாசகனுக்கு உணர்த்தும் முறையே இங்கு காட்சி நடை எனப் பெயர் பெறுகிறது."

ஆசிரியர் அவருக்கு பழக்கப்பட்ட இடங்கள் (அல்லது) கண்ட நிகழ்ச்சிகள் ஆகியவை கதைகளில் இடம்பெறும்போது அவரையும் அறியாமல் அங்குக் காட்சி நடை உருப்பெற்று விடுகிறது. காரணம் தாம் அனுபவித்ததைப் பிறரும் அனுபவிக்க வேண்டும் என எண்ணுகிறார் (Jeyarathi Augusting, 2012).

## நனவோடை உத்தியின் பண்பு

தமிழ்ப் புனைக் கதைகளில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் உத்திகளில் ஒன்று நனவோடை ஆகும். நனவோடை என்பது கதையைச் சொல்லுதலாகும். சுவையானக் கதைத் தொடக்க முறைகளில் ஒன்று கதையில் நனவோடை உத்தியில் தொடங்குவதாகும். தமிழில் ஏராளமானப் புதினங்களும், சிறுகதைகளும் நனவோடை உத்தியில் தொடங்கியுள்ளன. நூறு நாற்காலிகள் சிறுகதை ஒரு குறிப்பிடத்தக்கச் சான்றாகும் (Jayamohan, 2011).

நூறு நாற்காலிகள் எனும் சிறுகதையில் ஒரு அரசு உயரதிகாரியின் கூற்றாக அமையும் கதை அவர் தாழ்த்தப்பட்ட சாதீய பின்புலத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து உயர்பணிக்கு வந்தவர். கதையின் போக்கு அந்த உயரதிகாரியின் தாயாருடைய வாழ்க்கையை விவரிப்பதாக உள்ளது.

"அம்மா மரணப்படுக்கையில் இருக்கும் தகவலை குஞ்சன்நாயர்தான் வந்து சொன்னான். மாலையில் நான் ஆபிஸ் விட்டு கிளம்பும் நேரம் கடைசியாக மிச்சமிருந்த சில கோப்புகளில் வேகமாகக் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தேன். என்னெதிரே ரமணி நின்றிருந்தான். இரட்டைக் கதவுக்கு அப்பால் அவன் தலையைக் கண்டேன். 'என்ன விஷயம் குஞ்சன் நாயரே' என்றேன். அவன் ரமணியைக் கண்காட்டினான், நான் ரமணியிடம் போகலாம் என்று ஜாடைகாட்டி அவனை உள்ளே வரும்படி தலையசைத்தேன்" (Jayamohan, 2011).

இவ்வாறாக இக்கதையின் தொடக்கமானது நனவோடை உத்தியில் தொடங்குகின்றது. மேலும் கதையின் தொடக்கம் கதையைப் படிக்கும்போது வாசகனின் உள்ளத்தில் நீங்கா இடத்தைப் பெற முடியும்.

இதற்கு, கதையின் தொடக்கம் வாசகனின் உள்ளத்தில் பல்வேறு உணர்வலைகளைத் தூண்டிவிட வேண்டும். அதுவே சிறந்த சிறுகதை ஆகும். மேலும் கதை படிப்பவரைச் சிந்திக்கச் செய்யும் ஆற்றலுடன் விளங்கினால் அமைவது சிறப்பு என்கிறார் டாக்டர். சு. வேங்கட்ராமன் (Jeyarathi Augusting, 2012).

## இணைப்பும் பாலம் அமைத்தல்

சிறுகதை எழுதும்போது ஆசிரியர் கதையின் தலைமைப் பாத்திரத்தையோ (அ) நேரடியாக கதைக்குள்ளேயோ வருவதுபோல் எழுதுவதில்லை. முதலில் துணைமைப் பாத்திரத்தைக் கொண்டே கதைக்கானக் களத்தை உருவாக்கியுள்ளார் அந்த துணைமைப் பாத்திரப் படைப்புதான் கதைக்கும் தலைப்புக்குமானப் பாலமாக செயல்படுவர் என்று கதை வாசிப்பின்போதுதான் கதைக்கானக் களம் முழுமையாகத் தெரியவரும் (Jayamohan, 2011).

"காலை ஆறு மணிக்குத் தொலைபேசி அடித்தால் எரிச்சலடையாமல் எடுக்க என்னால் முடிவதில்லை. நான் இரவு தூங்குவதற்கு எப்போதுமே நேரமாகும். ஏப்ரல், மே தவிர மற்ற மாதமெல்லாம் மழையும், சாரலும், குளிருமாக இருக்கும். இந்தக் காட்டில் பெரும்பாலானவர்கள் எட்டு மணிக்கே நள்ளிரவுக்கான அமைதி குடியிருப்புகள் மீதும் கிராமங்கள் மீதும் பரவி முடிவிட்டிருக்கும் (Jayamohan, 2011).

இவ்வாறாக கதைக்கானப் போக்கை 'யானை டாக்டர்' எனும் சிறுகதையில் தலைப்புக் கொண்டே சுவைஞனின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைகின்றது. கதை முடிந்தாலும், சுவைஞனின் மனதில் நீங்கா வண்ணம் இருக்க வேண்டும் என்பதாகும் (Jayamohan, 2011).

இதேபோன்று, "ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகளும் காண முடிகிறது. கதைத் தலைப்பு அழுத்தம் பெறுகிறது. கதையின் தலைப்பில் அதன் முழுமைத்தன்மை வாய்ந்ததாக வாசகனுக்கு நிறைவான ஒரு மனநிலை ஏற்படுகின்றது. வாசகனின் மனத்தில் கதை முடிந்த பின்னரும் பூரணத் திருப்தியை உண்டாக்குகின்றது (Jeyarathi Augusting, 2012).

ஆகவே வாசகனின் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாகக் கதைப் போக்குகள் தொடக்கம் தலைப்பு ஆகியவை அமைய வேண்டும் என்று இப்பதிவுகள் மூலம் உணர முடிகிறது.

ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதை நூல்களுள் ஒன்று "நூறு" என்ற கதைகள் ஆகும். 'நூறு' என்ற சொல்லைப் பார்த்தவுடன் இதனுடையக் கதைத் தொடக்கம். முடிவு, எவ்வாறு இருக்கும் என வாசகர்கள் எண்ணி கண்களை மூடிக் கொண்டு வாங்கிச் செல்லக்கூடிய அளவிற்கு அவருக்கு தனி முத்திரையை வழங்கியது. அதேபோலத்தான் "ஜெயமோகனின் அறம்" படைப்பும் அவருக்கு தனி முத்திரையை வழங்கியுள்ளன.

## முடிவுரை

அறம் என்னும் சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் பன்னிரண்டு கதைகள் உள்ளன. அதில் ஐந்து கதைகளை மட்டுமே எடுத்துள்ளேன். மேலும் ஒரு கதையின் தொடக்கம் அக்கதைக்கு விறுவிறுப்பூட்டி அக்கதையை சுவைஞர் முழுமையாகப் படிப்பதற்குத் தூண்டுகோலாக உள்ளது. ஒரு கதையின் தொடக்கமானது கதையின் வழியாக சுவைஞர்கள் விடையறிய வேண்டிய வினாக்களை எழுப்பும் ஒரு சுவைஞன், ஒரு கதையை இறுதி வரை கவனம் சிதறாமலும் இடையில் நிறுத்தாமலும் ஒரு கதையைப் படித்து முடிப்பதற்கு அறம் சிறுகதைத் தொகுப்புகள் தளமாக அமைகின்றது.

## Reference

Jayamohan, (2011) Aram Sirukadhaikal, Vamsi Pathipagam, Tiruvannamalai, Tamilnadu, India.

Jeyarathi Augusting, (2012) R.S. Jacob Sirukathaigal our Thiranaaivu, New Century Books House Pvt Ltd. Chennai, India.

Poornachandran. G., (2012) Kathariyiyal, Adaiyalam Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License